# 'ஞானம் வழங்கு ஆச்சாறிய நிலை'
# 'தென்றிசை அருட் தலைமை நிலை'



நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,

இந்துமத ஆச்சாறியார், தமிழின ஆச்சாரியார்,
குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.



மெய்ஞ்ஞானக்கொடி

---

# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 38

[உறுப்பினர்களுக்கு மட்டும்]
வெளியீடு: 26-2-87

பதிவு: 135/83.
காணிக்கை: ரூ. 2-50

# அன்புள்ள சேவகனுக்கு ..........!

அன்புச் சேவக!

எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு இவ்வறிக்கையின் மூலம் நாம் மூன்றாண்டுகளை விரைந்து முடித்துவிட்டு; நான்காவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கின்றோம். கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைவிட, இன்றைய நாட்டின் நிலை மிகவும் சிக்கலானதாகவும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய வகையிலும் அமைந்துள்ளது. ஏனெனில், நாட்டின் எல்லாத்துறைகளுமே மேலோட்டமாக அமைதியாகக் காணப்பட்டாலும் உண்மையில் மிகவும் கொடூரமான இறுக்கமான பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன.

நண்ப!

சமயமும் - அரசியலும் ஒன்றையொன்று நேரடியாக மோதிக்கொள்ளும் காலக்கட்டம் வந்துவிட்டது. மதவாதிகள் ஆங்காங்கே நேரடியாக இன்றைய அரசியலில் ஈடுபடத்துவங்கிவிட்டனர். இந்த நிலை குறித்து, அரசியல் வல்லுனர்களும் பொருளாதார மேதைகளும், சமுதாய நிலை எழுத்தாளர்களும் மிகத் தீவிரமாக 'சமயம்—அதாவது மதவாதிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது' என்றும்; 'சமயப் போதகர்களும் குருமார்களும் சட்டமன்றத்தையும் பாராளுமன்றத்தையும் நிர்ணயிப்பதா?... என்றும் வினாவெழுப்பி வருகின்றனர். மேலும், 'சமயக் குருமார்களால்தான் மக்களின் வாழ்வும் வளமும் பாழாகி விட்டதாகவும், பாழாகி வருவதாகவும் போலியான, மாயமான வாதத்தை மக்கள் முன் எடுத்துவைக்கின்றனர். இன்றைய நிர்வாகச் சீர்கேடுகளுக்குப்; சமுதாய ஒழுக்கக் கேடுகளுக்கும் காரணம் இந்த அரசியல் வாதிகளின் ஏமாற்றல்களும், பொருளாதாரவாதிகளின் பயனற்றத் திட்டங்களும், சமுதாய நிலை எழுத்தாளர்களின் சீழ்ப்பிடித்தக் கதைகளும் நவீனங்களும் தான் என்பதை மூடிமறைக்கவே இவ்வாறு சிந்துபாட ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் புகழ்பெற்ற அரசியல் விமரிசகர் ஒருவர் எழுதுகின்றார், ''**பஞ்சாப்பின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைப் போடுவது இன்றைய சீக்கிய மதகுருமார்கள்**. எனவே, அவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.. சுத்தமான மக்களாட்சியை நிர்ணயிக்க வேண்டியது மக்களேயன்றி; மதக் குருமார்களல்ல'' -என்று கூறுகின்றார்.

இந்தியா விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகியும் நாட்டில் வறுமையோ, பஞ்சமோ, வேலையில்லாத் திண்டாட்டமோ... முழுமையாக நீங்கவில்லை. மேலும், அரசியல்வாதிகள் தாங்கள் பதவிக்கு வந்துவிட்டால் முடிசூடாமன்னர்கள் என்பதாகவும்; தங்களைத் தட்டிக்கேட்க நாட்டில் உள்ளவர்களில் எவருக்குமே தகுதியில்லை என்பதாகவும்... நினைத்து இறுமாந்து வருகின்றனர். இவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களே கூட தட்டிக்கேட்க முடியாத கட்டத்தில்தான் வேறுவழியின்றி சமயவாதிகள்-குருமார்கள் தங்கள் பொற்கோவிலின் மாடங்களை விட்டு மக்களைக் காக்க, அநீதிகளைப் போக்கப் புறப்பட்டுவிட்டனர். இதனை மக்களுக்கு உணர்த்தும் பொறுப்பில் உள்ள சமுதாயவாதிகள்தான் இந்த நிலையைக் கண்டித்து போலியான வாதத்தை மக்கள் முன் வைத்துக் குழப்பி வருகின்றனர்:

பதினெண் சித்தர்கள், இந்துமதத்தை சமூக விஞ்ஞானமாகப் படைத்ததே, நாட்டில் ஒழுங்கு விதிமுறைகள் கெட்டுப் போகும் காலத்துக் கண்டித்துத் திருத்துவதற்காகத்தான். இதைத்தான் தமிழக, தமிழின அரசு வரலாற்றில் காண்கின்றோம்.

[தொடரும்]

# புரட்சி மயங்கக் கூடாது- 7

—ஞாலகுரு சித்தர் கருவூரார்

இச்செயல்களால் இளைஞர்கள், 'தேன் குடித்த நரிகள்', 'கள் குடித்த குரங்கு-கள்', 'மகுடி கேட்ட நாகங்கள்', 'மழைத் தூறலைத் துய்த்த மான்குட்டிகள்'...போல் உணர்வு வயப்பட்டு வீணாகிடுகின்றார்கள். இப்பேரழிவை பேரிழிவை...உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமேயானால்; 'இந்து மதத்தைச் சாதனமாகப் பயன்படுத்துவதுதான் சிறந்த வழி' என்ற முடிவுக்கு வரவேண்டும். அதைத்தான், 'மதவழிப் புரட்சியே இந்தியாவைக் காப்பாற்றும்' என்று இருநூறு ஆண்டுகளாக இந்து மறுமலர்ச்சி இயக்கம் கூறிவருகிறது. ஆனால், இந்த இயக்கமே இருட்டறைப் பொருளாக, ஆழ்கடல் முத்தாக, அடர்காட்டு மலராகத்தான் இருந்து வந்திருக்கின்றது. இனியும் அது கூடாது என்பதற்காகத்தான் நாமெல்லாம் மிகப்பெரிய தியாகங்களைச் செய்து தீரத்தோடும், வீரத்தோடும், உரத்தோடும், தரத்தோடும்...... உழைக்கப் புறப்பட்டிருக்கிறோம். நமக்குப் புகழோ, பொருளோ, பதவியோ.. தேவையில்லை. நாம் விரும்புவது 'சமத்துவ சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைப்பதுதான். இதற்காகவேதான் நான் மிகமிகத் துணிவோடும், தெளிவோடும் எனக்குச் சரியென்று தோன்றிய கொள்கையை என்னோடு தொடர்பு கொள்ளும் அனைவரிடமும் விளக்கி வருகின்றேன்.

நான் வெறும் திட்டங்களை மட்டும் தாளில் தீட்டிக் கொண்டிருக்கவில்லை. என் கொள்கையையும் குறிக்கோள்களையும் செயலாக்கக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற, பேராற்றல்மிக்க, ஒற்றுமையில் சிறந்த இளைஞர் கூட்டம் ஒன்றை வளர்த்து விரிவாக்கி வளப்படுத்திக் கொண்டே வருகின்றேன். என்னுடைய முயற்சிகள் வெறும் பேச்சாகக் காற்றில் கரைந்து விடாமல் ஆயிரக்கணக்கான கட்டுரை-களையும், நூறாயிரக்கணக்கான அஞ்சல்களையும், நூற்றுக்கணக்கான நூல்களையும் வடிவமைப்போடு உருவாக்கிவிட்டேன். இவற்றிற்கு நாட்டின் பல்வேறு மூலைகளில் படிப்போரும் உருவாகி விட்டனர். இனி விரைவில், கோவில்கள் தோறும், 'சித்தர் நெறி', 'இந்துமதம்', 'இந்துமறுமலர்ச்சி இயக்கம்', 'கடவுளை வழிபடுவோர் கழகம்', 'இந்தியப் பண்பாட்டுக் கழகம்', 'இந்தியத் தெய்வீகத் திருச்சபை', 'இந்தியக் கலை கழகம்', 'இந்திய அருளாளர் மாமன்றம்', 'இந்திய மத நம்பிக்கை-யாளர் திருசபை', இந்தியச் சமுதாய நலப் பெருமன்றம்', 'இந்தியச் சமய ஆராய்ச்சிக் கழகம்', 'உலக மத ஆய்வுக்குழு', 'சித்தர் நெறிக் கழகம்', 'சித்தர் நெறி இயக்கம்', 'திராவிடப் பண்பாட்டு ஆய்வுக் கழகம்', திராவிடமொழி ஆய்வுக் கழகம்', 'தமிழ்மொழி வளர்ச்சிக் கழகம்', 'தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்', 'உலக மானுட நலக்காப்புக் கழகம்',... முதலிய பல அமைப்புகள் அமைக்கப்படும் முயற்சி-கள் நடக்கும். ஒவ்வொரு கோயிலிலும் தனிமனிதர்கள் தங்களின் பழம்பிறப்புக்-களையும், மறு பிறப்புக்களையும், சமயப் பேருண்மைகளையும் அறிய, புரிய, உணரப் பயிற்சிகள் வழங்கப்பட்டிடும். அதற்காக சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் கோவில்களையெல்லாம் தங்களுடைய பயிற்சிப் பள்ளிகளாக மாற்றிடுவார்கள். எங்கும் 'ஞானக்கொடி' வானுறப் பறந்-திடும்... இவற்றால் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆழமான நெடிய பெரிய தத்துவ நோக்கங்கள் இன்றைய சமய, சமுதாய, அரசியல், தொழில், கலை, இலக்கியம், பொருளாதார வட்டாரச் சூழல்களுக்கேற்பச் செயல்திட்டங்களாக வடிவமைப்புப் பெற்றுள்ளன.

(தொடரும்)

# மாற்றமே அறிவுவளர்ச்சி

## மக்கள் மதமே அரசியல்

## PEOPLE, RELIGION AND POLITICS

வழங்கப்பட்ட வழிகளும், வகைகளும், கருவிகளும், கருத்துக்களும், கொள்கைகளும், குறிக்கோள்களும்... வாழுகின்ற நிகழ்கால வாழ்வுக்குப் பயன்பல வழங்கக் கூடியவையா? என்று ஆராய்வதே அறிவுடைமை. இதை விடுத்து முன்னோரின் முடிவு, ஆன்றோரின் ஆய்வு, சான்றோரின் சால்பு, அறிஞர்களின் அருந்திறல், பெற்றோரின் விருப்பு, பெரியோரின் அறிவுரை, நெறிமிக்கோரின் அறிவுரை...... என்று ஒவ்வொன்றுக்கும் பழமைச் சிறப்பு அளித்திட்டால் அது பகுத்தறிவைப் படுகுழிப் படுத்தும்.

மனிதனின் மனதிலே பிறந்த மகிழ்ச்சி, இகழ்ச்சி, புகழ்ச்சி... முதலிய ஆற்றல் மிகு உணர்வுகள் மனிதனின் புறவாழ்வில் நெகழ்ச்சியை நிலைநாட்டின. அவற்றால் நேர்ந்ததே நெருங்கி வாழும் வாழ்வு அது 'மதம்' என்றும்; 'அரசியல்' என்றும் இரு பெரும் அடிப்படைகளைக் கொண்டு உருவானது. அப்படி உருவானதுதான் சமுதாயம் (Society). எனவேதான், மதத்தையோ, அரசியலையோ, சமுதாயத்தை விட்டுப் பிரிக்க முடியாது. இருந்தும், மதம் அரசியலே இல்லாமல் வாழ முடியும் என்றும்; அரசியல் மதமே இல்லாமல் வாழ முடியும் என்றும்; ஒன்றையொன்று வெறுத்தொழிக்க முற்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் முதலாளித்துவம் மதத்தை ஆதரிப்பது; பொதுவுடமை மதத்தை வெறுத்தொழிப்பது; என்று வடிவம் பெற்றன. ஆழ்ந்து சிந்தித்தால், 'மதம் அரசியலாக இயங்குகின்றது' என்பதையும்' 'அரசியல் மதமாக வாழுகிறது' என்பதையும் உணரலாம். அதாவது, இரண்டும் பெயரளவிலேயே வேறுபடுகின்றன என்பதாகும். இப்படிச் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மதக்கருத்துக்களையும், மதவாழ்வுகளையும், அரசியல் வாழ்வுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் அதாவது, தெரிந்தவரே புரிந்தவராக முடியும். அப்படி புரிந்தவராக வாழ்ந்தவர்கள் உலகெங்கினும் தோன்றியிருக்கின்றனர். இருந்தாலும், அவர்களின்மேல் மதம் அல்லது அரசியல் எனும் வண்ணம் பூசப்பட்டிருப்பதால் அவர்களின் உண்மை உருவம் உணரப்படாமல் போய்விடுகினறது.

ஆரம்பகாலத்தில் காடுகளில் அலைந்தவன், இன்பதுன்பங்களையும் பிற அறிவியல் நெறிகளையும் நேரடியாகத் துயத்து உணர்ந்து தெளிந்தான் அவன், 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எண்ணினான். அப்படியவன் எண்ணியதால் பட்டறிவு ஏட்டறிவாயிற்று (Experiences converted to as book knowledge) எனவே, பிற்கால மனிதன் எதையும் நேரடியாகத் துய்த்துணரும் வழக்கத்தையும், வாய்ப்பையும், வசதியையும், இழந்தான். அதனால், பிற்கால மனிதன் இந்த இழப்பை ஈடு செய்ய வேண்டியவனாயினான். அதற்காகத்தான் இவன், நாட்டிலே வாழ்ந்த போதும்; காடுகளில் வாழ்ந்த மனிதன் ஏடுகளில் எழுதிச் சென்றவற்றில் ஈடுபாடு காட்டலானான். இருந்தாலும் உயிரும் உணர்வுமற்ற ஏட்டுக் கல்வியால் இவனுடைய உள்ளத்தைத் தொட முடியவில்லை.

அதாவது, உள்ளத்தைத் தொடமுடியாத ஏட்டுக் கல்வியே இவனுக்குத் துணையாக அமைய நேரிட்டது எனவே, இவன் தன்னுடைய தேவை அனைத்துக்கும் உரிய அறிவை ஏட்டுக் கல்வியிடமிருந்து எதிர்பார்த்தான். அது எதிர்பாராத ஏமாற்றத்தையே அளித்தது. ஆகவே, ஏட்டுக் கல்வி

இவனுடைய உள்ளத்தை உலைக் கூடமாக்கிச் சிந்தையைச் சிறப்புக்குரிய கலைக் கூடமாக்கத் தவறி விட்டது. இதனால், மனித வாழ்வு கவலை என்ற வலைகொண்டு, தொல்லை என்னும் மீன் பிடிக்கும் தொழிலாயிற்று. அதாவது களிமிகு கலையாக வடிவெடுக்க வேண்டிய மனிதவாழ்வு கவலைமிகு தொழிலாக உருவெடுத்தது. இத் தோல்விதான், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகியும் மனிதனை மனிதனாக்க முடியாமல் செய்து வருகின்றது.

மனிதன், தோல்விக்குக் காரணமாக ஏட்டுக் கல்வியை எடுத்தெறியவும் முடியவில்லை. மனிதனின் தோல்வியைத் தோல்வியுறச் செய்யும் நாட்டுக்கல்வியைப் [அனுபவக் கல்வி = Experience Knowledge] பட்டறிவின் மூலம் வளர்க்கும் முறையை முழுக்கக் கடைபிடிக்கவும் முடியவில்லை. ஏட்டிலிருப்பவை நாட்டு நடப்பிலும்; நாட்டு நடப்பிலுள்ளவை ஏட்டிலுமாக இருக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்காக முயன்று வருபவரின் பட்டியலே சரிவர வெளித் தெரிவதில்லை. அப்படிப் பல சிந்தனைச் சிற்பிகள், கருத்துக் கருவூலங்கள், பகுத்தறிவுப் பாசறைகள், சீர்திருத்தச் செம்மல்கள் செயல்வீரர்கள்... உலகால் உணரப்படாமல் போயினர். அக்குறைதான் மனிதனை நிறைவு பெற முடியாமல் தடுக்கின்றது இதையுணர்ந்தே இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு; உலகம் மறந்தவர்களையும் மறுத்தவர்களையும். மறைத்தவர்களையும் உலகுக்கு நினைவு படுத்தும் பணியில் விரிவாகவும் விரைவாகவும் ஈடுபட்டிருக்கின்றார் திரு. எம். என். ராய். அப்பணியினை அணிபெறச் செய்யும் பணிகளுள் ஒன்றே இக்கட்டுரை.

எம்.என். ராய் தனது கருத்தாலும், சொல்லாலும் செயலாலும் ஏட்டுக் கல்வியைவிட நாட்டுக்கல்வி உயர்ந்தது என்பதை மெய்பித்தவர். அதோடு அவர் நாட்டுக்கல்வியைக் கற்கும் முறையையும், நாட்டுக் கல்வியை ஏட்டுக் கல்வியாக்கும் முறையையும், நாட்டுக்கல்வியும் ஏட்டுக் கல்வியும் இணைந்திருக்கும் வகையையும் தெளிவாக விளக்கிச் சென்றுள்ளார். அவரளித்துச் சென்ற விளக்கங்கள், மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற முயற்சிகளுள் ஒன்றே இக்கட்டுரை.

**'எப்படிப் பிறந்தது?'** என்ற நூலில் சீர்திருத்தச் செம்மல், கருத்துக் கருவூலம் பகுத்தறிவுப்பாசறை, புதுமையின் பிறப்பிடம், புரட்சியின் இருப்பிடம், பொது வாழ்வின் பேரிலக்கியம். அரசியல் உலகுக்கோர் கலைக்களஞ்சியம், அறிவுக்கோர் பெருவிருந்து, தாய்நாட்டுக்கோர் எடுத்துக்காட்டு, விடுதலை வேட்கைக்கோர் வீர வரலாறு. சிந்தனைச்சோலை — என்று பலபடியாகப் பாராட்டுவதற்குரிய பயன்மிக்க வீரவாழ்கை வாழ்ந்து சென்ற அறிவுலகப் பெருவீரர் எம்.என். ராயின் வரலாற்றை மையமாகக் கொண்டு உலகுக்குத் தேவையானக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

எம். என். ராய் அவர்கள் இப்படித்தான் அமைய வேண்டும் என்று எண்ணினரா? என்று அறுதியிட்டு கூற முடியாது. ஆனால். இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அவருடைய எண்ணமே அடிப்படை யாகும். அதனால்தான் இந்நூலை எண்ண அளவில் உருவாக்கியவர் எம். என். ராய்; அதைச் சொல்லளவில் உருவாக்கியவர் எம்தந்தை ம. பழநிச்சாமிப்பிள்ளை, எழுத்தளவில் உருவாக்கியவன் நான். இப்படி மூன்று பேரால் அதை செவிமடுத்து உருவாக்கப்பட்ட இந்நூலில் மூவரின் சொந்தக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன, என்பதே வெளிப்படை. இருப்பினும், மூவரின் கொள்கைகளும், குறிக்கோள்களும் ஒரே தன்மைத்தன. எனவே. எண்ணியவர், சொல்லியவர், எழுதியவர் என்று இந்நூலாசிரியர் மூவராயினும் இந்நூல் உலகைப் பிடித்தாட்டும் குழப்பம், கலக்கம் மயக்கம். பகைமை, போராட்டம், போர், இனவெறி, நாட்டுவெறி, ...முதலிய,

-வற்றை அடியோடு அகற்றிட பேருதவியாய் இருக்கும்.

ஒருவன் மாற நேரிடுகின்றது; தன்னை அறியாமல் தானே மாறுகிறான். ஒருவன் மாற்றிக் கொள்ள வேண்டிய இன்றியமையா நிலை உருவாகிறது; தானே விரும்பித் தன்னை மாற்றிக் கொள்ளுகிறான். ஒருவன் ஏதோ சிலகாரணங்களுக்காகத் தன்னை மாற்றிக் கொள்ள விரும்புகின்றான்; அதன்படி மாற்றிக் கொள்கின்றான். இதை ஒருவன் காலப்போக்கில் சிறுகச்சிறுகத் தன்னையறியாமலேயே மாறுதலடைதல்; சூழ்நிலைகளால் தனக்கு விருப்பமில்லாதிருந்தும் தன்னைத் தானே மாற்றிக்கொள்ளல்; பிறர் வற்புறுத்தி ஒருவனை மாற்றியமைத்தல்; பிறர் ஏற்படுத்திய மாற்றத்தை விருப்பமில்லாவிட்டாலும் உலகியலுக்காக ஏற்றுக்கொள்ளல்; பிறரால் வற்புறுத்தி ஏற்படுத்தப்பட்ட மாற்றமேயானாலும் அது தேவையானது என்று ஏற்றுக்கொளல்... இப்படிப் பலநிலைகள் (Conditions), பலசூழல்கள் (Circumstances), பலவகைகள் (Varities) உண்டு.

ஒருவன் தெரிந்து மாற்றம் பெறல், தெரியாமல் மாற்றம் பெறல்; ஒருவன் தேவையற்ற மாற்றத்தைச் செய்து கொள்ளல்; ஒருவன் தேவையான மாற்றத்தையே மறுத்தல்; ஒருவன் அடிக்கடித் தன்னை மாற்றிக் கொளல்; ஒருவன் என்றென்றுமே தன்னை மாற்றிக் கொள்ளாதிருத்தல் முதலியவைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒருவன் மாறினானா? மாற்றப்பட்டானா? பிறரை மாற்றினானா? மாற்றிக் கொண்டது தனக்காகவே? பிறருக்காகவா? மாற்றப்பட்டது அவனுக்காகவா? அடுத்தவருக்காகவா? பிறரை மாற்றியது தனக்காகவா? அவருக்காகவா?... முதலியவை பற்றியும் சிந்திக்கவேண்டும்.

"...நாட்டுக்கும், ஏட்டுக்கும் நல்ல பல பணிகள் ஆற்ற வேண்டுமானால்; ஆரவாரமோ, போராட்டமோ, பெருங்கூட்டமோ தேவையில்லை. அவரவர் தங்கள் தங்களுடைய அறிவு, ஆற்றல், ஆர்வம், உணர்வு, ஊக்கம், நிலைத்திறம், பயிற்சி, வலிமை, வளமை, வாய்ப்பு வசதி... முதலியவற்றிற்கேற்பவே தொண்டாற்ற முற்பட வேண்டும். அதை விடுத்துத் தங்களை அழித்துக் கொண்டு தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைத் துறந்து; தங்களின் வாழ்வை மறந்து நாட்டுக்கும் ஏட்டுக்கும் தொண்டு புரிபவர்களால் முழுமையாகத் தொண்டாற்ற முடியாது அவர்களின் தொண்டால் விளையும் பயன்களும் முழுமையுடையனவையாக இருக்கமுடியாது..."

—ம. பழனிச்சாமி

அன்பு — சித்தர்

---

# சித்தர் இராமாயணம் - 10

குருதேவரே! என் மகள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள்தான் சூரிய குல அரியணையில் தொடர்ந்து அமர்ந்து வாழையடிவாழையாக அரசாட்சி செய்ய வேண்டும். அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் நீங்கள்தான் செய்ய வேண்டும். அரக்கர்குலம், வாரிசுகள் இல்லாமல் போய்விட்டது. திரிசடையும் உயிர் வாழ்வாள் என்று சொல்ல முடியாது. அவள் சீதையை இராமரிடம். ஒப்படைத்ததும்

எங்களது ஊமத்தீயில் எரிந்து சாம்பலாவாள். எனவே, எங்களின் குலக் -கொழுந்தான சீதையை எப்படியாவது காப்பாற்றி எங்கள் குலம் விளங்கச் செய்ய வேண்டும். சூரிய குல அரச குடும்பத்தார்கள்; என் மகளை இராமனை விட்டுப் பிரிப் பார்களேயானால் அவளுக்கு முழுப்பாதுகாப்பும் உங்களால்தான் வழங்கப்பட வேண்டும். உங்களுடைய மாணாக்கர்களில் வால்மீகிகளும், கம்பர்களும் அயோத் தியைச் சுற்றி நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு முன் கூட்டி அறிவிப்பு வழங்கி என் மகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யுங்கள், ' என்றும்,

'குருதேவரே! இந்த வசிட்டனுக்கும், விசுவாமித்திரனுக்கும் போட்டாபோட்டி வந்தால் அரிச்சந்திரனோடு நின்றிருக்கக் கூடாதா? வசிட்டபுராணமும் விசுவாமித்திர புராணமும் அரிச்சந்திர புராணத்தோடு நின்றிருக்கக் கூடாதா? அது எங்களுடைய அரக்கர்குல புராணங்களோடும் வளர்ச்சி பெற வேண்டுமா? அரக்கர் கோனின் முடிவால் தங்களுக்கு நிம்மதி வந்துவிட்டதாக வசிட்டனும், விசுவாமித்திரனும் நினைக்கவேண்டாம். என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் அரக்கர் குல வாரிசு இவர்களை அழிக்காமல் விடாது. அடுத்த அழிவு இவர்களுக்குத்தான். இனிமேல் அரக்கர் குல ஆட்சி இலங்கையிலிருக்காது. அயோத்தியில் இருக்கும். இதைத் தாங்கள் தான் மெய்யாக்க வேண்டும்' என்றும்,

'குருதேவரே! என் மகளின் மாமியார் கோசலை, எப்படியும் தன் மகன் மனதைக் கெடுத்து என் மகளை வாழாவெட்டியாக்கிடுவாள். நீங்கள்தான் என்மருமக -னுக்கு அறிவுரை கூறி என் மகளை வாழ வைக்க வேண்டும். எங்கள் குலச் செல்வி யை நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும். இரு குலத்திற்கும் நீங்கள்தான் குரு -தேவர் என்பதால் உங்களால்தான் என்மகளை காப்பற்ற முடியும். சனகனின் பெரும்படையோ, வசிட்டவிசுவாமித்திரர்களின் தவ வலிமையோ என்மகளைக் காப்பாற்ற முடியாது. என் மகள் இனி அனாதைதான். மூவுலகமும் ஆண்ட அரக்கர் கோனின் மகள் இப்படி அனாதையாகி விட்டாளே! இவளுக்கு எல்லாயுகங் -களிலும் நிலைத்த புகழும், பெருமையும் ஏற்பட்டிட நீங்கள் தான் அருள்புரிய வேண்டும்! உதவ வேண்டும். அனைத்து வகையான பாதுகாப்புக்களையும் நல்க வேண்டும்', என்றும்,

'குருதேவரே! அயோத்தி அரண்மனையில் பணிபுரியும் கூனிமந்தரை [கூனி மந்தாரை = கூனி மாந்தரை = கூனி மாந்தாரை] க்குக்கூட என் மகள் சீதையைப் பிடிக்கவில்லை. எனவே, என் மகள் அயோத்தி அரண்மனையில் வாழ முடியாவிட்டாலும் சனகனின் மிதிலை அரண்மனையிலாவது வாழட்டும். அவளை மீண்டும் காட்டில் அலைய விட்டுவிடாதீர்கள். அவள் புகுந்த வீட்டிலும் சிறையிருக்க நேரிட்டுவிட்டது. பிறந்த வீட்டிலும் சிறையிருக்க நேரிட்டுவிட்டது. கணவனோடு துவங்கிய வாழ்வு காட்டிலேயே நிகழ்ந்து விட்டது. இனியும் அவளுக்குச் சிறை வாழ்வோ, காட்டுவாழ்வோ தேவையில்லை. அவளுக்கு வளர்ந்த இடமான சனகனின் மிதிலையில்தான் நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைத்தது. எனவே, அயோத்தி அரண் மனையில் அவளுக்கு எந்தப் பாதிப்பு ஏற்பட்டாலும் உடனே அவளை அவளுடைய வளர்ந்த இடமான சனகனின் மிதிலையில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். இப்போ -திருந்தது போல் பாராமுகமாக இருந்துவிடாதீர்கள். எங்களுக்குப் பிறகாவது எங்களது மகளைக் காக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்'. என்றும்,

'குருதேவரே! சனகன் தன் மகளுக்குச் சுயம்வரம் நடத்திய போது என் கணவரிடம் மட்டும்; சனகனின் வளர்ப்புமகள் சீதை எங்களுடைய அரக்கர் குலச் சுடர்க்கொடியே! குலக்கொழுந்தே! அரசமகளே!... என்ற பேருண்மையைத் தெரிவித்தீர்கள். அதை எனக்கும் தெரிவித்திருப்பீர்களேயானால் அப்பொழுதே என் மகள் சீதையின் வாழ்க்கையில் துன்பத்தின் நிழல்கூடப் படியாமல் தடுத்திருப்பேன். இனி என்ன செய்வது; அனைவரும் மாண்டுவிட்டார்கள், நானும் மாளப் போகிறேன். ஆனால், எங்கள் அரக்கர் குலப் பெருமை மாளக் கூடாது. எங்களுடைய அரக்கர் குலம் என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் வாரிசுகளால் வாழையடி வாழை -யாக இந்த யுகத்தையே ஆள வேண்டும். அதற்கு நீங்கள் தான் உதவவேண்டும் குருதேவரே!' என்றும்,

'குருதேவரே! எங்கள் குல இறுதி மருமகன் மானுடனாக இருந்தான் என்ற இழிவையும், பழியையும் போக்குவதே அரிது. இவற்றிற்கெல்லாம் மேலாக அவன் முறையற்ற முறையில் பலபோர்களைச் செய்தான்; நீதியும் நேர்மையும் இல்லாத முறையில் பலரைக் கொன்றான்; என்ற பழிச்சொல்லையும், இழிச்சொல்லையும் எப்படிப் போக்குவது? இதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும். எப்படியாவது புதிய சில தருக்க நியாயங்களை வழங்கி எனது மருமகன் செய்தவையனைத்தும் நீதியானவை -யே, நெறியானவையே, முறையானவையே என்று உலகம் நம்பச் செய்துவிடுங்கள். அப்பொழுதுதான் எங்கள் குலம் தழைக்க வாழப்போகும், எங்கள் மகளின் வாழ்க்கை சிறக்கும். இராவணப்போரை ஒரு பெரியபுராணமாக்கி விடுங்கள்' என்றும்,

'குருதேவரே! உலக மக்கள் அனைவரும் போற்றுகின்ற சிவகீதை, திருமால் கீதை, பிறமண்கீதை, சத்தி கீதை, திருமாள்கீதை, கலைமகள்கீதை, நாரதர்கீதை, இயமன்கீதை, குபேரன்கீதை, இந்திரன்கீதை, தேவேந்திரன்கீதை, மாரிகீதை (வருணன்கீதை), காளிகீதை (அக்கினிகீதை), காத்தாயிகீதை (வாயுகீதை), முருகன்கீதை, கணபதிகீதை....... முதலியவைகளைப் போல் என்னுடையகீதை (வண்டமர்குழலிகீதை), அரக்கர்கோன்கீதை(இராவணன்கீதை), அரக்கர்கோன் தம்பி கீதை (கும்பகர்ணன்கீதை), மேகநாதன்கீதை முதலியவை சிறப்படையட்டும். எனக்குப் பிறகு என் மகள் சீதை தன்னை ஈன்றெடுத்த தந்தையையும், தாயையும் தன்தந்தையின் உடன் பிறந்தவர்களையும், தன்னுடன் பிறந்தவர்களையும், தன்னுடைய அரக்கர் குலத்தையும் எண்ணிஎண்ணி, குமுறிக்குமுறி, கதறிக்கதறி, வெதும்பி அரற்றி அழுதுபுலம்பி எழுதப்போகிற கீதை; இதுவரை எழுதப்பட்டுள்ள . மானுட இனத்து வசிட்டன்கீதை, விசுவாமித்திரன்கீதை, தசரதன்கீதை, சனகன்கீதை... முதலிய அனைத்துக் கீதைகளையும் விட உயர்ந்ததாக, பயன்மிக்கதாக, சுவைமிக்க தாக இருந்திடும். அதைத் தாங்கள் தான் இறவா இலக்கியமாக்க வேண்டும்' என்றும்.

'குருதேவரே! என் மருமகனும், மகளும் இனிய இல்லறம் நடத்தவிடாமல் அவர்கள் கூடவே இருந்து தொல்லை கொடுத்து வரும் இலக்குவனை அற்பப் பதராக எண்ணாமல் அவனை மிகஎச்சரிக்கையோடு கண்காணித்து என் மகள் வாழ்க்கையைக் காப்பாற்றுங்கள். அவனாலோ, அல்லது அவனைத் தூண்டிவிட்ட தசரதன் மனைவிகள் மூவராலோ என் மகளின் இனிய இல்லறம் கெட்டுவிடக்கூடாது, பாதிக்கப்பட்டுவிடக்கூடாது ' என்றும்,...

இப்படிப் பலவாறு வேண்டுகோள்களை விடுத்துக் கொண்டிருந்த வண்டமர் குழலி, இராவணன் உடல் மீது மயங்கி விழுந்து உயிர் துறந்தாள் என்று யக்ஞவல்லி குறிக்கின்றார். இவர் வண்டமர் குழலியின் புலம்பல், வண்டமர் குழலியின் அரற்றல், வண்டமர் குழலியின் ஒப்பாரி என்ற சொற்களைப் பயன்படுத்தி வண்டமர் குழலியின் இறுதி வாசகங்களை நூற்றுக்கணக்கில் தொகுத்து இருக்கின்றார். இவற்றுக்கு 'இராவணாற்றி' என்ற தலைப்பும் உண்டு. இராவணன் வளர்த்த பேசும்பறவைக் கூட்டம் [இன்றைக்கு 'மைனா' என்று அழைக்கப்படுவது] வண்டமர் குழலி இராவணனுக்காக அழுது புலம்பி அரற்றிய அனைத்து வாசகங்களையும் கூறிக் கொண்டே எங்கும் பறந்து திரிந்தன என்று குறிக்கின்றார். எனவேதான், இப் பறவைக்கு இராவணன் ஆற்றி -> இராவணாற்றி என்றே பெயர். இன்றைக்கும் இப்பறவைகளின் பேச்சொலிகள் வண்டமர் குழலியின் அரற்றலாக, புலம்பல்களாக, ஒப்பாரியாக, அழுகையாக.... இருக்கின்றன. இந்தப் பறவைகளைப்பற்றிய செய்தி அரசபாரம்பரியங்களிலும் குருபாரம்பரியங்களிலும் மிகத் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளது.

(முற்றும்)

---



# இந்தியாவில் மார்க்சீயம்-20

—சித்தர்

மேலும், விஞ்ஞான வளர்ச்சிகள், சமுதாயத்தில் மண்மூடிப் போன அறியா மைக் கேள்விகளுக்கு விளக்கம் மட்டுமல்ல; விளக்கமானதொரு தொடர் வழியையும் காட்டிற்று. மேலும், அவருக்குத் தொடர்ந்து ஏற்பட்ட வாழ்வியல் தோல்விகள் வெறும் சமுதாயச் சுரண்டலைப் பற்றியும், வறுமையைப் பற்றியும், பிணியைப் பற்றி யும்,அதிகார வர்க்கத்தைப் பற்றியும, ஆட்சியியலின் கட்டற்ற ஒழுங்கமைப்புப் பற்றி யும் பல எண்ணவோட்டங்களைத் தவிர்க்க முடியாமல் தள்ளி விட்டதில் ஐயமுண்டோ! மேலும், பாலபருவத்திலே தனது எதிர்கால வாழ்வைப் பற்றி திட்டவட்டமாக உரைத்ததையும் நினைவு கூர்தல் வேண்டும். அது மட்டுமல்ல அவரின் கருத்தோட்டம் மென்மேலும் வளர்ச்சியுறவைத்தது. அப்பொழுது வாழ்ந்த பல தெய்வீகக் கருத்து முதல் வாதிகளின் சொற்போர்கள் இவரை மென்மேலும் பண்படுத்தியது. ஆனால், **எப்படி மார்க்சின் பின்னணி வாழ்க்கையை உணராமல் மார்க்சீயத்தை உணரமுடியாதோ; அவ்வாறேதான் ஒருநாட்டின் குடிமகனின் பிறச்சினை -களை, வாழ்வியல் பின்னணிகளை உணராமல் அவனுக்கு நேரடியாக மார்க்சீயத் தத்துவத்தைப் போதித்தால் அது எடுபடாது.**

இதை எப்படி விளக்கலாமென்றால் 1872 செப்டம்பர் 1 முதல் 7 ஆம் நாள் வரைத் தொடர்ந்து 'ஏக்' நகரில் நடைபெற்ற முதலாவது இண்டர்நேசனலின் ஐந்தாவது மாநாட்டில் மார்க்சும், எங்கல்சும் வலியுறுத்தி சட்டமாக்கியது இதைத் தான்,... 'ஒவ்வொரு நாட்டிலும் சுயேச்சையான அந்தந்த நாட்டின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில், ஆனால்; கம்யூனிசப் பாதையை நோக்கி மனித குல விடுதலையை நோக்கிச் செல்லக் கூடிய வகையில் அமைக்க வேண்டும் என்று வலி யுறுத்துகின்றார்...இப்படி,மார்க்சே, 'ஒவ்வொரு நாட்டிலுள்ளஒவ்வொரு குடிமகனின் உணர்வுகளுக்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் உரிய முக்கியத்துவம் அளிப்ப -தையேக்கூட கம்யூனிசத்தின் உரிய உயரியத் தத்துவம்' என்கின்றார்.

மார்க்சிற்கு ஏற்பட்ட சமுதாய நெருக்கடி அவரை சமுதாயப் பிரச்சினைகளை அதாவது, மனிதகுலப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க வைத்ததே தவிர, ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளும் புறமும் உலவும் ஆன்ம நேய உணர்வுகளை அவரால் ஆராய்வதற்கு இயலவில்லை; காரணம் அவரின் சிந்தனை மக்களை, மனித குலத்தை வறுமையிலிருந்து எப்படி மீட்பது? என்பது பற்றித்தான் இருந்ததேயொழிய தனிமனிதனைப் பற்றியச் சிந்தனைக் குறைவு அவருக்கு உண்டு.

மேலும் மனித உயிர்களைப் பற்றியும் அவற்றின் பிரிணும வளர்ச்சிப் பற்றியும், முற்பிறப்புப் பிற்பிறப்பு பற்றியும்...எவ்விதமானக் குறிப்புக்களும் அவருக்கு கிடைத்திட்ட மதநூல்களில் இல்லை. குறிப்பாக இந்து சமயமான சித்தர் நெறியில் அவருக்கு ஆழ்ந்த அறிவோ, தெளிவார்ந்தக் கருத்துக்களை எடுத்தியம்பக் கூடிய நூலோ அல்லது எடுத்து ஓதக்கூடிய குருவோ இல்லை. எனவேதான் அவரால் நம் தமிழகத்தின் ஆணிவேரெனத் திகழும்; முழுக்க முழுக்க பகுத்தறிவுக் கோட்பாட்டில் இயங்கும் 'சித்தர்நெறி' கேட்கும் கேள்விகளுக்கு மார்க்சினுல் பதில் சொல்ல இயலவில்லை. மேலும் கிறிஸ்துவ மதமோ, இசுலாம் மதமோ, புத்த மதமோ இயற்கையில் உருவான ஒன்றல்ல, அவை தனிமனிதர்களால் உருவாக்கப்பட்டவை. எனவே, மனிதன் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி அதை ஒடிப்பது என்பது மார்க்சிற்கு எளிதாகப் போய்விட்டது. ஆனுல் இந்து மதத்தின் சாராம்சங்கள் அறிவுபூர்வமாகவும் அனுபவத்தின் வாயிலாகவும்; மேலும் தனிமனிதன் ஒருவனுலன்றி பலரால் உணரப்பட்டும்; உணர்ந்து வடிவப்பட்டும் உருவாக்கப்பட்டதுதான். இந்து மதம் இன்னும் விளக்கிக் கூறுவோமாஞல், மற்ற மதங்கள் இந்த அளவிற்கு வேதங்களையோ, மறைகளையோ...தோத்திறச்சாத்திறங்களையோ...விளக்க முறைகளையோ, செயல் முறைகளையோ.. பெற்றிருக்கவில்லை.

நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும் மற்றும் சமயப் பெரியார்களும் தன்னலமின்றி உழைத்தார்கள். சமயப் பொது நோக்கினை சமுதாய அளவினில் மாற்ற முயன்றுர்கள் என்பதை இந்து சமய வரலாற்றை உணர்ந்த எவநும் மறுக்க இயலுமா?...இங்ஙனம் போன்ற எனது ஆழ்ந்த சிந்தனைகள் எனது தந்தையிடம் வெளிப்பட்டன. அவர் மட்டுமின்றி மார்க்சின் தத்துவமுத்துக்கள் கூட இவற்றுக்கு விடையிறுக்க மறுத்து விட்டன. நான் நோற்ற தவங்களும் வேள்விகளும் பெற்றிட்டப் பயிற்சிகளும், முயற்சிகளும் அனுபவங்களும் வறுமையில் அடைந்த தத்துவங்களும் வாழ்க்கையின் கோடியில் உணர்ந்த உணர்வுகளும் தான் என்னை முழுக்க முழுக்க மதநம்பிக்கையுள்ளவனுக்கின. இதை எப்படி என்னுல் வலியுறுத்திக் கூற முடிகின்றது என்ருல் சிறுவயது முதலே என்னை என் தந்தை, மார்க்சைப் பற்றியும், எங்கல்சைப்பற்றியும் கூறிக்கூறி வளர்த்தார். அந்த நினைவுகளும் எண்ணவோட்டங்களும் பசுமரத்தாணி போல் எனது நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருந்தன. அந்த உணர்வோட்டங்களின் நிழலாட்டங்களின் இடையில்தான் நான் மதப்பயிற்சிகளைப் பெற்றேன் என்பதினை எவரும் மறக்கக் கூடாது. மார்க்சுக்காவது அன்பு மனைவி, அறிவார்ந்த நண்பன் உடனிருந்தனர். ஆனுல், எதுவுமற்று வறுமையிலும் வாழ்வின் சகதியிலும் உழன்று திரிந்தவன் நான் என்கின்ற போது மனித குலத்தின் நாள் தோறும் மட்டுமின்றி காலந்தோறும் நடைபெற்றுவரும் அடிமைவர்க்கத்தையும் அறியாமையையும் என்னுல் காணமுடிந்தது. புத்தக வாயிலின் மூலம் நான் கண்ட சமுதாயத்திற்கும், நாடோடியாய் காடோடியாய் கடலோடியாய் திரிந்த நேரத்தில் நான் கண்ட சமுதாயத்திற்கும் உள்ள இடைவெளியை அல்லது வரையறுக்க முடியாத அளவிற்கு உள்ள வேறுபாட்டினைக் காணமுடிந்தது.

(தொடரும்)

# ஐந்தொழில் வல்லான் நிலை - 4

இந்த மாபெரும் முயற்சிக்கு பல நிலைத்தேர்ச்சியுடைய சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், சித்தர் நெறி ஆர்வலர்கள், சித்தர் நெறி ஆதர-வாளர்கள், சித்தர் நெறி விருப்பாளர்கள், சித்தர் நெறி நம்பிக்கையாளர்கள், சித்தர் நெறி ஏந்தாளர்கள், சித்தர் நெறி காப்பாளர்கள்......முதலிய பலவகையி-னரையும் உருவாக்குவதற்காகவே பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்குரிய சட்ட திட்டக்கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், முறைகளையும், நெறிகளையும் கடந்து இதுபோன்ற பேருண்மைகளை அருட்கொடையாக வாரிவாரி வழங்குகின்றார். எனவே, இதனை நம்மவர்கள் நன்கு பலருக்கும் தெரிவித்தல் வேண்டும். இதுபோன்ற பல செய்திகளும், கருத்துக்களும் நமது மாத மலரான குருதேவர் அறிக்கையில் வெளிவருவதால் நம்மவர்கள் பெரிதும் முயன்று பேரூர், சிற்றூர், கிராமம், குக்கிராமம் என்று எல்லா இடங்களிலும் ஆண்டு சந்தா ரூ 25 கட்டி இந்த அறிக்-கையையும், அருளையும், அருளூறு பூசனைப் பொருள்களையும் பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். அப்பொழுதுதான், கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, முதலிய பல புரட்சிகள் விளைந்து முழுமையான பண்பாட்டுப்புரட்சி (The Total cultural revolution) அறுவடைப் பயனைத் தந்திடும் நிலை உருவாகிடும்.

அந்த நிலையின் அடிப்படையில்தான், மெய்யான இந்துமதம் மறுமலர்ச்சியும் வள வளர்ச்சியும், ஆட்சி மீட்சியும், உரிமைச் செழிச்சியும், பெருமை உயர்ச்சியும் அடைந்திடும், அடைந்திடும், அடைந்திடும். அதற்குரிய முயற்சிகளைச் செய்பவர்களுக்கு வழங்கிடும் பயிற்சிகளாகத்தான் குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூராரின் அருட்கொடைகள் வளர்ந்து வருகின்றன. இதனை நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும் செயல்படவேண்டும்.

### திசைகளும் — நடராசர் சிலையின் நிறங்களும்

(I) வடகிழக்குத் திசையான ஈசான திசையை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை பளிங்கு நிறமுடையதாக இருக்க வேண்டும் அல்லது பளிங்குக்கல்லிலே செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

(II) கிழக்குத் திசையை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை பொன்னிறமுடையதாக இருக்க வேண்டும். அல்லது பொன்னால் செய்யப்பட்டிருக்க வேண்டும்,

(III) தெற்கு திசையை நோக்கி வைக்கப்படும் நடராசர் சிலை கருமை நிறமுடையதாக இருக்கவேண்டும் அல்லது இரும்பில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(iv) மேற்கு திசையை நோக்கியிருக்கும் நடராசர் வெண்மை நிறமுடையதாக இருக்க வேண்டும் அல்லது வெள்ளியினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

* பளிங்கு நிறத்திற்கு படிகம், வெள்ளைக்கல், கூழாங்கல், கடலாழத்திலும், இமயமலையின் முடியிலும் கிடைக்கக் கூடிய மன்மதக்கல் முதலிய கற்களும் பயன்படுத்தப்படலாம்.

(v) வடக்கு நோக்கியிருக்கும் நடராசர் சிலை சிவப்பு நிறமுடையதாக இருக்க வேண்டும். அல்லது செம்பினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு: மறை = இரகசியம்

(தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

# ஞானம் வழங்கு ஆச்சாறிய நிலை

## தென்றிசை அருட்தலைமை நிலை

—இந்துமத ஆச்சாறியார், தமிழின ஆச்சாரியார்
ஞாலகுரு சித்தர் கருவூரார்

இம்மண்ணுலகிலேயே முதன்முதல் தோன்றிய மிகப்பெரிய நிலப்பகுதியான 'இளமுறியாக் கண்டம்' (இளமை மாறுத கண்ட ஆ முதிர்ச்சியடையாத மண்பரப்-பைக் கொண்ட நிலம் = The Loose-soiled Surface) எனப்படும் குமரிக்கண்டமேயாகும். இதனுடைய இடைவெளி தூரம் 7000 கல் (ஏழாயிரம் கல்) தொலைவு இருந்தது என்றும்; இதனுடைய தென்கோடியிலேயே பனிமூடிய இமயமலையும், இருந்தது என்றும்; அங்கிருந்தே வற்றுத தென்கங்கை, தென்யமுனை, தென் பிறம்மபுத்திரா என்று பதினெட்டுப் (18) பேராறுகள் ஓடின என்றும்; செய்திகள் பதினெண் சித்தர்களின் குருபாரம்பரியம், அரசபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் முதலிய பல நூல்களில் குறிக்கப்படுகின்றன.

இந்தப் பனிமூடிய தென் இமயமலையிருந்து வற்றுத 18 ஆறுகள் ஓடியது போல், இங்கு அமைக்கப்பட்ட பதினெண்சித்தர் பீடத்தின் கீழ் 18சித்தர்கள் அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை எனும் நான்கையும் வற்றுத தத்துவ ஆறுகளாக ஓடவிட்டார்கள். அப்படி, அவர்கள், ஞானம் என்றென்றும் வற்றுது ஆருக ஓடுவதற்குச் செய்த பதினெண் சித்தர் பீடத்தின் அருள்வழங்கு தோற்ற நிலைதான் 'தென்றிசை அருட் தலைமை நிலை' = தட்சிணு மூர்த்தி நிலை என்று உலகத்தவரால் பெயரிடப்பட்டு, அறிவிக்கப்பட்டு, அறியப்பட்டு உணர்த்தப்பட்டு, உணர முற்பட்டு வருகின்ற நிலை தொடர்ந்து வருகின்றது. எனவே-தான் இம்மண்ணுலகில் தோன்றிய எந்த மதத்திலும் இல்லாத ஒரு வழிபாட்டு வடிவம் (A Wo shipping Statue) ஞானம் வழங்கு ஆச்சாறிய நிலையில் (தட்சிணு மூர்த்தி நிலை) கல்லால மரத்தின் கீழ் செதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, பதினெண் சித்தர்களின் தலைவராகவும் முதல் பீடாதிபதியாகவும் உள்ள 'சீவன்' எனப்படும் 'சிவன்' தனது மாணுக்கர்களுக்கு 'ஞானப்பொருளை மோனப்பொருளாக' வழங்குகிற தோற்றத்தைத்தான் ஓவியமாகவும் சிலையாகவும் வடித்து ''குருநிலை மாணுக்க நிலை என்ற இருநிலையே சமயத் துறைக்குக் கருநிலை'' என்று குருபாரம் பரியம் விளக்குகிறது. எனவேதான், சித்தர்களின் சீவநெறி எனப்படும் சிவநெறியான இந்துமதத்தின் எல்லாக் கோயில்களிலும், ''ஞானப்பொருளை மோனப் பொருளாக வழங்கும் அருள்நிலைச் சிலை'' சிறப்பாக இடம் பெற்றிருக்கிறது. இந்தச் சிலை தென்றிசையில் தோன்றிய சமயத் தத்துவங்களின் தலைமை சார்ந்த வழிபாட்டுக்குரியது என்று பொருள் குறிக்கும் சமசுக்கிருதச் சொல்தான் தட்சிணு மூர்த்தி —> தட்சிணம் = தெற்கு + மூர்த்தி = தலைவன் —> தென்றிசைத்தலைவன். அதாவது, பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் சூழ்ச்சியாக இந்து மதத்திலுள்ள பொருளாழ மிக்க தமிழ்ச்சொற்களையெல்லாம் சமசுக்கிருத மொழிச் சொற்களாக மாற்றியதன் மூலம்தான் தமிழர்களிடமிருந்து இந்து மதத்தைப் பிரித்துத் தங்களுக்கு உரியதாக ஆக்கிக் கொண்டார்கள். இங்கு ஒருசில சொற்களையாவது குறிக்க விரும்புகிறோம்.

—தொடரும்